தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### தமிழகம், புதுச்சேரியில் கன மழை பெய்யும்: வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு

வட கடலோரத் தமிழகம், புதுச்சேரியில் அடுத்த 24 மணி நேரத்தில் கன மழை பெய்ய வாய்ப்புள்ளது என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியதாவது: தென் மேற்கு வங்கக் கடல், அதனை ஒட்டியுள்ள இலங்கை கடல் பகுதியில் உருவான தீவிர குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதியானது, இன்னும் அதே இடத்தில் நிலை கொண்டுள்ளது. அடுத்து வரும் 48 மணி நேரத்தில், அது குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறும் (புயல் சின்னம்) என எதிர்பார்க்கிறோம். ஆனால் தற்போது இன்னும் அதே நிலையில்தான் நீடிக்கிறது. ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் நாகை மாவட்டம் வேதாரண்யத்தில் 20 மி.மீ, புதுச்சேரி மாநிலம் காரைக்கால், நாகை, பாம்பன் ஆகிய இடங்களில் தலா 10 மி.மீட்டர் மழை பதிவாகியுள்ளது.

முன்னறிவிப்பு: வட கடலோரத் தமிழகம், புதுச்சேரியில் அடுத்த 24 மணி நேரத்தில் ஆங்காங்கே கன மழை பெய்யும். மேலும் கடலோரத் தமிழகத்தில் பல்வேறு இடங்களிலும், உள் தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது. பலத்த தரைக்காற்று வீசும்: சென்னை மாநகரில் பொதுவாக வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மாநகரின் ஒரு சில இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதே நேரத்தில் தரைக் காற்று பலமான வீசக்கூடும். மீன் பிடிக்கச் செல்ல வேண்டாம்: வட தமிழகம், புதுச்சேரி கடலோரப்

பகுதிகளில், வடக்கு, வடகிழக்கு திசையிலிருந்தும், தென் தமிழக கடலோரப் பகுதிகளில் வட மேற்கு, வடக்கு திசையிலிருந்தும், மணிக்கு 45 முதல் 55 கி.மீ வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். மேலும் ஆழ்கடல் பகுதிகளுக்குள் சென்று மீனவர்கள் மீன் பிடிக்க செல்ல வேண்டாம் எனவும் வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

## இரண்டாம் பருவ மலர்க் கண்காட்சி நிறைவு

சேலம் மாவட்டம், ஏற்காட்டில் மூன்று நாள்களாக நடைபெற்று வந்த இரண்டாம் பருவ மலர்க் கண்காட்சி ஞாயிற்றுக்கிழமையுடன் நிறைவுபெற்றது. ஏற்காட்டில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் மூன்று நாள்களாக இரண்டாம் பருவ மலர்க் கண்காட்சி, கலைவிழா நடைபெற்று வந்தது. இதில் உள்ளூர், வெளியூர், வெளி மாநிலங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் கலந்துகொண்டு கண்காட்சியைப் பார்வையிட்டனர். மலர்க் கண்காட்சியின் நிறைவு விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதையொட்டி, சேலம் மாவட்ட கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் நாய்கள் கண்காட்சி நடைபெற்றது. இதில் சேலம் கிச்சிப்பாளையம் சங்கர் என்பவரின் கிரேடன் நாய் முதல் பரிசையும், ஏற்காட்டைச் சேர்ந்த ஷைலுகென்னல் ஜெர்மன் செப்பேர்டு நாய் இரண்டாம் பரிசையும், முன்னா என்பவரின் ஜெர்மன் செப்பர்டு நாய் மூன்றாம் பரிசையும் பெற்றன. இதைத் தொடர்ந்து, மலர்க் கண்காட்சி வாண வேடிக்கையுடன் நிறைவுபெற்றது. மலர்க் கண்காட்சி நிறைவு விழாவையொட்டி, ஞாயிற்றுக்கிழமை காலை முதலே ஏற்காடு பனி மூட்டத்துடன் காணப்பட்டது. இந்த தட்பவெப்ப நிலையால், சுற்றுலாப் பயணிகள் மகிழ்ச்சி அடைந்தனர். ரூ.3.50 லட்சம் வசூல்: இரண்டாம் பருவ மலர்க் கண்காட்சியையொட்டி, முதல் நாளில் அண்ணா பூங்காவை 3,283 பேரும், ரோஜா தோட்டத்தை 733 பேரும் பார்வையிட்டனர். இரண்டாம் நாளில் அண்ணா பூங்காவை

4,837 பேரும், ரோஜா தோட்டத்தை 796 பேரும், 3-ஆம் நாளில் அண்ணா பூங்காவை 8,117 பேரும், ரோஜா தோட்டத்தை 1,000 பேரும் பார்வையிட்டனர். இதன் மூலம் பார்வையாளர் கட்டணமாக ரூ.3.50 லட்சம் வசூலானது. மேலும், சேலம் மாவட்டம் மோட்டார் பைக் மெக்கானிக்குகள் சங்கம் சார்பில் மூன்று இடங்களில் நடைபெற்ற இரு சக்கர வாகன இலவச பழுதுபார்க்கும் முகாமில் 430 இரு சக்கர வாகனங்களும், 4 கார்களும் பழுது பார்க்கப்பட்டன.

**வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் சார்பில் ரூ.1.26 கோடி கடனுதவி**

கலசப்பாக்கத்தை அடுத்த வீரளூரில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தின் சார்பில் சுய உதவிக் குழுவினர் உள்ளிட்டோருக்கு ரூ.1 கோடியே 26 லட்சம் மதிப்பிலான கடனுதவியை தமிழக வேளாண்மைத் துறை அமைச்சர் அக்ரி. எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி வழங்கினார். கலசப்பாக்கத்தை அடுத்த மேல்சோழங்குப்பம் கிராமத்தில் மக்களிடம் கோரிக்கை மனுக்கள் வாங்கும் சிறப்பு முகாம் மற்றும் வீரளூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் மூலம் ரூ.1 கோடியே 26 லட்சத்து 17 ஆயிரம் மதிப்பிலான கடனுதவி வழங்கும் விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு மாவட்ட வருவாய் அலுவலர் எஸ்.பழனி தலைமை வகித்தார். வருவாய் கோட்டாட்சியர் உமா மகேஸ்வரி வரவேற்றார். மக்களவை உறுப்பினர் ஆர்.வனரோஜா, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் எம்.எஸ்.நைனாகண்ணு ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு விருந்தினராக தமிழக வேளாண்மைத் துறை அமைச்சர் அக்ரி. எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி கலந்துகொண்டு பொது மக்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்றார். பின்னர் ஆண், பெண் சுய உதவி குழுக்களுக்கு கடன், கறவை மாடுகள் வாங்க கடன், மாற்றுத் திறனாளிகள் கடன், பயிர்க் கடன் என மொத்தம் 599 நபர்களுக்கு ரூ.1 கோடியே 26 லட்சத்து 17 ஆயிரம் மதிப்பிலான

கடனுதவிக்கான காசோலையை வழங்கினார். தொடர்ந்து வருவாய்த் துறையின் மூலம் 60 பயனாளிகளுக்கு பல்வேறு நலத் திட்ட உதவிகளையும், 47 பேருக்கு திருமண உதவித் தொகையையும் வழங்கினார். நிகழ்ச்சியில் ஒன்றியச் செயலாளர் எம்.திருநாவுக்கரசு, தொகுதிச் செயலாளர் எஸ்.கோவிந்தராஜ், ஒன்றியக் குழுத் தலைவர் டி.ஜெயராமன், துணைத் தலைவர் எம்.கருணாமூர்த்தி, கூட்டமைப்புத் தலைவர் கே.சி.கிருஷ்ணமூர்த்தி, செயலாளர் கே.ஆர்.பாண்டியன், வட்டாட்சியர் டி.கிருஷ்ணமூர்த்தி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஏ.எஸ்.குமார், கே.பாலகிருஷ்ணமூர்த்தி, மாவட்ட இளைஞர் அணி தலைவர் பி.பொய்யாமொழி, மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் சந்திரா தங்கராஜ், ஊராட்சி மன்றத் தலைவர்கள் பத்மாவதி ஜீவரத்தினம், ஆறுமுகம், இ.ஜி.மணி,எம்.முருகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## விவசாயிகளுக்கு மானிய விலையில் ஜிப்சம்

நிலக்கடலையில் அமோக மகசூல் பெற விவசாயிகளுக்கு மானிய விலையில் ஜிப்சம் வழங்கப்படும் என நம்பியூர் வேளாண்மை அதிகாரி தெரிவித்துள்ளார். தற்போது நம்பியூர் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் மார்கழிப்பட்ட நிலக்கடலை சாகுபடி செய்யப்படுகிறது. நிலக்கடலைக்கு ஜிப்சம் உரம் இடுவதால், கூடுதல் மகசூல் கிடைப்பதாக வேளாண்மைத் துறையினர் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து நம்பியூர் வேளாண்மை உதவி இயக்குநர் அ.நே.ஆசைத்தம்பி தெரிவித்துள்ளதாவது: நிலக்கடலைப் பயிரை சாகுபடி செய்யும்போது அதன் மகசூலை அதிகரிப்பதற்கு ஜிப்சம் உரம் பயன்படுத்தப்படுகிறது. ஜிப்சம் உரத்தின் ரசாயனப்பெயர் கால்சியம் சல்பேட். இதில் கால்சியம் (சுண்ணாம்பு) சத்து 23 சதவீதம் வரையிலும், கந்தகச்சத்து (சல்பர்) 18 சதவீதம் வரையிலும் உள்ளது. நிலக்கடலை உள்ளிட்ட எண்ணெய் மற்றும் புரத பயிர்கள் அனைத்திற்கும் ஜிப்சம் அவசியம் இட வேண்டும். ஏனெனில் இந்தப் பயிர்களுக்கு மிகவும் அவசியமான கந்தகசத்து ஜிப்சத்தில் தான் அதிக

அளவிலும் குறைந்த விலையிலும் கிடைக்கிறது. தமிழகத்தில் அனைத்து பகுதி மண் வகைகளிலும் கந்தகச்சத்து குறைபாடு காணப்படுகிறது. கந்தகச்சத்து குறைபாடு காரணமாக விளைச்சல் குறைவதுடன் எண்ணை யின் அளவும் குறைகிறது. பயிர் வளர்ச்சி குன்றி வேர்முடிச்சுகள் பாதிப் படைவதால் தழைச்சத்தை நிலைநிறுத்துவதும் பாதிக்கப்படுகிறது. எனவே ஜிப்சம் இடுவதால் இந்தக் குறைபாடுகள் நீக்கப்படுகின்றன. ஜிப்சம் இடுவதால் மண் இறுக்கம் குறைந்து, நிலக்கடலைக் காய்களின் பருமன் ஒரே சீராகவும், திரட்சியாகவும் ஆகிறது. நிலக்கடலை பருப்பு விதைக்கும் போது ஏக்கருக்கு 80 கிலோவும், விதைத்த 45 வது நாளில் களை வெட்டி மண் அணைக்கும் போது ஏக்கருக்கு 80 கிலோவும் மொத்தம் 160 கிலோ ஜிப்சம் இடவேண்டும். தற்போது நம்பியூர் வட்டாரத்தில் உள்ள நம்பியூர், குருமந்தூர் ஆகிய வேளாண்மை விரிவாக்க மையங்களில் 50 சத மானிய விலையில் அனைத்து விவசாயிகளுக்கும் ஜிப்சம் வழங்கப்படுகிறது. ஜிப்சம் தேவைப்படும் விவசாயிகள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, தங்களது குடும்ப அட்டை (ரேசன் கார்டு) நகலுடன் சம்மந்தப்பட்ட வேளாண் விரிவாக்க மையத்தை அணுகி மானிய விலையில் ஜிப்சம் உரத்தை பெற்று பலன் பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>அசாமில் ஊதா தேயிலை உற்பத்திக்கு வாய்ப்பு</u>**



கவுகாத்தி:உலகளவில், கென்யாவை அடுத்து, ஊட்டச்சத்துள்ள ஊதா தேயிலை உற்பத்திக்கான சாதகமான அம்சங்கள் அனைத்தும், அசாமில் உள்ளது என, அம்மாநிலத்தில் உள்ள டொக்லாய் தேயிலை ஆராய்ச்சி மைய மூத்த விஞ்ஞானி, பிரதீப் பரூவா தெரிவித்து உள்ளார்.அவர், மேலும் கூறியதாவது:கருந்தேயிலையை விட, மூன்று அல்லது நான்கு மடங்கு விலையுள்ள ஊதா தேயிலையை, கென்யா மட்டுமே உற்பத்தி செய்து வருகிறது.இந்த உடல் ஆரோக்கியத்திற்கான ஊதா தேயிலைக்கு, வருங்காலத்தில், சிறப்பான வர்த்தக வாய்ப்பு காத்திருக்கிறது. முதன் முதலில், அசாமில் தான், இந்த தேயிலை கண்டுபிடிக்கப்பட்டது. இந்தி-யாவில் இருந்து கென்யா சென்ற ஆங்கிலேய தாவரவியல் ஆய்வா-ளர்கள், தாங்கள் கொண்டு சென்ற ஊதா தேயிலை விதைகளை, அங்கு பயிரிட்டனர். இந்த வகையில், அசாம் ஊதா தேயிலை விதைகள், கென்-யாவில், 1903ல் முதன் முதலாக துளிர்விடத் துவங்கின. இன்று, கென்யா, ஊதா தேயிலை உற்பத்தியில், தன்னிகரற்ற ஒரே நாடு என்ற சிறப்புடன் திகழ்கிறது. இந்நாட்டின் தேயிலை ஆராய்ச்சி அமைப்பு, இதுவரை, ஊதா தேயிலையின் 51 படிவாக்க விதைகளை வெளியிட்டு உள்ளது. அவற்றில், 41,அசாம் விதைகள் ஆகும்.இன்றும், அசாமின் கர்பி அனலாங் மற்றும் கச்சார் மாவட்டத்தில் உள்ள பரக் பள்ளத்தாக்கின் புதர் பகுதிகளில், ஊதா தேயிலை செடிகள், மண்ணோடு மண்ணாக மக்கி, மறைந்து காணப்படுகின்றன. அவை வளர்வதற்கான மண்வளமும் அங்-குள்ளது. ஊதா தேயிலை உற்பத்தியை மேம்படுத்துவதன் மூலம், வருங்-காலத்தில், இத்துறை சார்ந்த வர்த்தகத்தில், இந்தியா தலைசிறந்து விளங்கும்.இவ்வாறு, அவர் கூறினார்.ஆரோக்கியத்திற்கு...: புற்று நோயை தடுக்கவும், பார்வை திறனை அதிகரிக்கவும், கொலஸ்ட்ராலை குறைக்கவும், ஊதா தேயிலை உதவுகிறது. ரத்தத்தில் சர்க்கரை அளவை கட்டுப்படுத்துவது உள்ளிட்ட, பல்வேறு மருத்துவ குணங்களை கொண்-

டது. தேயிலை விவசாயத்தில் புழங்கும் சொலவடையில் அசாமிற்கும், கென்யாவிற்கும் அதிக ஒற்றுமை உள்ளது.

## தேனி விவசாயிகளுக்கு கை கொடுக்கும்திசுவாழை: அரபு நாடுகளுக்கு ஏற்றுமதி



தேனி:தேனி மாவட்டத்தில் சின்னமனுார் பகுதியில் இருந்து கூடலுார் வரை சாகுபடி செய்யப்படும் திசு வாழை அரபு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.மாவட்டத்தில் பத்தாயிரம் ஏக்கர் பரப்பில் திசு வாழை சாகுபடி நடக்கிறது. தேனி வாழை தென் ஆப்பிரிக்கா மற்றும் அரபு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஒரு வாழை நாற்றுக்கு 80 ரூபாய் செலவு செய்யவேண்டும். ஒரு தாருக்கு 300 ரூபாய் கிடைக்கும். இந்த வாழைகளை குளிர் பதன கிடங்கில் வைத்து காற்று புகாத வகையில் ‘பேக்’ செய்து துாத்துக்குடியில் இருந்து கப்பல் மூலம் வெளி நாடுகளுக்கு அனுப்பி வைக்கின்றனர்.அதிகபட்சமாக ஒரு மாத காலம் வரை கப்பலில் பயணம் செய்யும் இந்த வாழை வெளிநாடுகளுக்கு சென்றடைகிறது.இது குறித்து சடையால்பட்டி வாழை விவசாயி வெங்கடேஷ் கூறியதாவது:இங்குள்ள மண், நீர் வளம் உள்ளிட்டவற்றால் திசு வாழை ரகங்களுக்கு நல்ல ருசி உள்ளது. இதனால் வெளிநாடுகளில் தேவை அதிகரித்துள்ளது. ஆனால் திடீரென சூறாவளி உள்ளிட்ட இயற்கை பேரிடர் சேதம் ஏற்படாமல் இருக்கவேண்டும். நவீன தொழில்நுட்பம் முலம் ‘பேக்’ செய்து அனுப்பவேண்டும். ஏதாவது குறைபாடு இருந்தால் வெளிநாட்டில் வாழைத்தார் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கப்பலையே திருப்பி அனுப்பி விடுவர். இருந்தாலும் திராட்சை உள்ளிட்ட விவசாயத்தை ஒப்-

பிட்டு பார்க்கும் போது வாழை சாகுபடி விவசாயிகளுக்கு கை கொடுத்து-வருகிறது, என்றார்.

## இயந்திர நடவுக்கு மாறிய விவசாயிகள்

புதுமாவிலங்கை: கடம்பத்துார் ஒன்றிய பகுதியில், நெல் நடவுப் பணிக்கு ஆட்கள் கிடைக்காததால் விவசாயிகள், இயந்திர நடவுக்கு மாறியுள்ளனர். கடம்பத்துார் ஒன்றிய பகுதியில், பகுதிவாசிகள் பெரும்பாலும் விவசாயத்தை நம்பி வாழ்ந்து வருகின்றனர். இந்நிலையில் தற்போது, விவசாய நடவுப்பணிக்கு ஆட்கள் கிடைக்காததால், இயந்திர நடவுப் பணிக்கு மாறி வருகின்றனர். இதுகுறித்து, இப்பகுதி விவசாயிகள் கூறியதாவது: 100 நாள் வேலை வாய்ப்பு திட்டம் வந்தது முதல், வயல்களில் நெல் நடவுப் பணிக்கு ஆட்கள் கிடைப்பதில்லை. இதனால், நாங்கள் இயந்திர நடவுப் பணிக்கு மாறியுள்ளோம். மேலும், 'இயந்திரம், மூலம், நெல் நடவுக்கு தேவையான நாற்றங்கால், சரியான விதை தேர்வு செய்யப்பட்டு, விதை நேர்த்தி செய்து, இயந்திரம் மூலம் டிரேயில் விதைக்கப்படுகிறது. பின் வயலுக்கு தேவையான அளவு நாற்றுகள் கொண்டு வரப்பட்டு, இயந்திரம் மூலம் நடவு செய்யப்படுகிறது. அதன் மூலம் ஆட்கள் செலவு குறைவதுடன், குறைந்த வயது மற்றும் வளமான நாற்றுகள், குறித்த நேரத்தில் நடவு செய்வதன் மூலம் கூடுதல் மகசூல் பெற முடியும். இயந்திரம் மூலம் ஒரு ஏக்கர் நடவு செய்ய, 5,500 முதல், 6,000 ரூபாய் வரை மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது. இதனால், கூலி ஆட்களை கொண்டு பணி செய்வதை காட்டிலும், எங்களுக்கு பணி சுலபமாக முடிந்து விடுகிறது. இதனால், நாங்கள் அனைத்து பணிகளுக்கும் இயந்திரங்களை பயன்படுத்தி வருகிறோம்இவ்வாறு அவர்கள் கூறினர்.

## 44 பயனாளிகளுக்கு வெள்ளாடுகள்

பள்ளிப்பட்டு: இரண்டு ஊராட்சிகளில், தமிழக அரசின் விலையில்லா வெள்ளாடுகள், 44 பேருக்கு வழங்கப்பட்டன. பள்ளிப்பட்டு ஒன்றியம், பெருமாநல்லுார் மற்றும் ராமச்சந்திராபுரம் ஆகிய ஊராட்சிகளில், தமிழக அரசின் விலையில்லா வெள்ளாடுகள் வழங்கும் விழா நடந்தது. ஒன்றிய செயலர் சீனிவாசன் தலைமை வகித்தார். கால்நடை துறை உதவி இயக்குனர் செல்லத்துரை வரவேற்றார். இதில், பால்வளத்துறை அமைச்சர் ரமணா, தமிழக அரசின் முன்னாள் டில்லி சிறப்பு பிரதிநிதி நரசிம்மன் ஆகியோர், தேர்வு செய்யப்பட்ட 44 பயனாளிகளுக்கு, வெள்ளாடுகள் வழங்கினர்.

## மானாவாரி பருத்தி பஞ்சு அறுவடை துவக்கம்

தியாகதுருகம்: தியாகதுருகம் பகுதியில் சாகுபடி செய்துள்ள பருத்தி செடிகளில் இருந்து பஞ்சு அறுவடை செய்யும் பணிகளை விவசாயிகள் துவக்கியுள்ளனர். தியாகதுருகம் பகுதியில் உள்ள 30 க்கும் மேற்பட்ட கிராமங்களில் 10 ஆயிரம் ஏக்கர் பரப்பில் மானாவாரி பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கடந்த ஜூலை இறுதி வாரத்தில் விதைப்பு பணிகளை முடித்து பராமரித்தனர். அளவான மழை பெய்ததால் செடிகள் செழித்து வளர்ந்தது. ஊட்டச்சத்து உரங்களை தூவி மருந்து தெளித்ததால் பூச்சு தாக்குதலின்றி காய்கள் பருத்து வளர்ந்தது. தற்போது காய்கள் முற்றியதால் வெடித்து பஞ்சு வெளிப்பட்டுள்ளது. இதனை அறுவடை செய்யும் பணியை விவசாயிகள் துவக்கியுள்ளனர். அவ்வப்போது மழை பெய்வதாலும், இரவில் பனிப்பொழிவு உள்ளதாலும் பஞ்சு சேதமடையாமல் சேகரித்து பாதுகாக்க வேண் டியது அவசியமாகும். இதனால் ஒரு ஏக்கரில் பஞ்சு சேகரிக்க கூலியாட்கள் 10 பேர் வரை

வேலை செய்ய வேண்டியுள்ளது. கள்ளக்குறிச்சி பருத்தி சந்தையில் கடந்த புதன் கிழமை ஒரு குவிண்டால் பஞ்சு அதிக பட்சமாக 4,129 ரூபாய்க்கு விற்றது. பஞ்சு அறுவடை துவக்கம் என்பதால் குறைந்த விலையே கிடைக்கிறது. கடந்த ஆண்டு அதிக பட்சமாக 5,650 ரூபாய்க்கு விற்றதால் இவ்வாண்டு ஒரு குவிண்டாலுக்கு 6 ஆயிரம் ரூபாய் வரை விலை கிடைக்கும் என்று விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

## ஆத்தூரில் மஞ்சள் ஏலம்

ஆத்தூர் : ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை, உற்பத்தியாளர்கள் கூட்டுறவு, விற்பனை சங்கத்தில், நடந்த மஞ்சள் ஏலத்தில், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, பெரம்பலூர், சின்னசேலம், கடலூர், ஆத்தூர் மற்றும் அதன் சுற்றுவட்டார, கிராம பகுதியை சேர்ந்த விவசாயிகள், 235 மூட்டை மஞ்சளை, விற்பனைக்கு கொண்டு வந்தனர்.
விரலி மஞ்சள் குவிண்டால், 6, 699 முதல் 8,909 ரூபாய் வரை, உருண்டை மஞ்சள் குவிண்டால், 3, 912 முதல் 8,336 ரூபாய் வரை, பனங்காலி மஞ்சள் குவிண்டால், 12,812 முதல் 13,369 ரூபாய் வரை விற்பனையானது. 235 மூட்டை மஞ்சளை, 11.60 லட்சம் ரூபாய்க்கு வாங்கி சென்றனர்.கூட்டுறவு விற்பனை சங்க அலுவலர் ஒருவர் கூறுகையில்,"மஞ்சள் குவிண்டாலுக்கு, 500 ரூபாய் விலை உயர்ந்துள்ளது, மீண்டும் விவசாயிகள், மஞ்சளை இருப்பு, வைக்க துவங்கியுள்ளனர்.'என்றார்.

## வறட்சி மேலாண்மையை கையாண்டால் உளுந்தில் அதிக மகசூல் பெற வாய்ப்பு

மோகனூர் : "வறட்சி மேலாண்மையை கையாண்டால், உளுந்து பயிரில் அதிக மகசூல் பெறலாம்' என, மோகனூர் வேளாண் உதவி இயக்குனர் கந்தசாமி தெரிவித்துள்ளார். மார்கழி-தை பட்டத்துக்கு, வம்பன், 3, வம்பன், 4, கோ 5, டி.எம்.வி., 1, போன்ற ரகங்கள் பரிந்துரை

செய்யப்படுகிறது. தனிப்பயிர் விதைப்புக்கு, ஏக்கருக்கு, எட்டு கிலோவும், ஊடுபயிராக விளைவிக்கும் போது, ஏக்கருக்கு, நான்கு கிலோவும் விதை தேவைப்படுகிறது. ஒரு கிலோ விதையை, நான்கு கிராம் டிரைக்கோடெர்மா விரிடி அல்லது பத்து கிராம், சூடோமோனாஸ் கொண்டு விதை நேர்த்தி செய்ய வேண்டும். அதை தொடர்ந்து, ஒரு ஏக்கருக்கு தேவையான விதையுடன், ஒரு பாக்கெட் (200 கிராம்) ரைசோபியம் மற்றும் ஒரு பாக்கெட் பாஸ்போ பாக்டீரியா கலந்து ஆறிய கஞ்சியுடன் விதை நேர்த்தி செய்து, நிழலில் உலர்த்தி பின் விதைக்க வேண்டும்.விதைகளை, 30க்கு, 10 செ.மீ., இடைவெளியில் விதைக்க வேண்டும். வரப்பு ஓரங்களில் பயிரிடுவதாக இருந்தால், 30 செ.மீ., இடைவெளியில் விதைகளை ஊன்ற வேண்டும். விதைப்பதற்கு முன், ஏக்கருக்கு, 10 கிலோ தழைச்சத்து, 20 கிலோ மணிச்சத்து, 20 கிலோ சாம்பல் சத்து அளிக்கக்கூடிய உரங்களுடன், எட்டு கிலோ கந்தகசத்தும் இட வேண்டும். மானாவாரி, இறவை மற்றும் நெல் தரிசு உளுந்து அனைத்துக்கும், 20 கிராம் டை அம்மோனியம் பாஸ்பேட் அல்லது 20 கிராம் யூரியாவை, ஒரு லிட்டர் நீரில் கரைத்து, பூக்கும் தருணத்தில் ஒரு முறையும், 15 நாட்கள் இடைவெளியில் மீண்டும் ஒரு முறையும் தெளிக்க வேண்டும்.உளுந்து நடவு வயலில், ஏக்கருக்கு, இரண்டு கிலோ நுண் உரக்கலவையை, 20 கிலோ தொழு உரத்துடன் ஊட்டமேற்றி இடவேண்டும். மகசூலை அதிகரிக்க, 10 கிராம் யூரியாவை, ஒரு லிட்டர் நீரில் கரைத்து விதைத்த, 30 மற்றும், 45ம் நாளில் தெளிக்க வேண்டும்.மேலும், தழைச்சத்துக்கு பதில், ஏக்கருக்கு, 850 கிலோ மண்புழு உரமிட்டும் மகசூலை அதிகப்படுத்தலாம். களைகளை கட்டுப்படுத்த, விதைத்த, 15 மற்றும், 30ம் நாளில், களை எடுக்க வேண்டும். வறட்சி மேலாண்மைக்காக, 20 கிராம் பொட்டாசியம் குளோரைடை, 100 கிராம் போரானுடன் கலந்து தெளிப்பதால் பயிர் வறட்சியை தாங்கும் திறனை அடைகிறது.இவற்றை முறையாக

கடைபிடித்தால், ஏக்கருக்கு, 400ல் இருந்து, 500 கிலோ வரை மகசூல் பெறலாம்.இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

<u>தேநீர் பருகினால் உடல் பாதிப்பு கட்டுப்படுத்தப்படும்'</u>

ஊட்டி : "விவசாய நிலங்களின் "வளர்ப்பு தாய்' என அழைக்கப்படும், வனம், மலைகளை பாதுகாக்க வேண்டும்' என, அறைகூவல் விடுக்கப்பட்டது. நீலகிரி மாவட்ட நிர்வாகம், சுற்றுலா துறை மற்றும் இந்திய தேயிலை வாரியம் சார்பில், ஊட்டி மலைப்பகுதி மேம்பாட்டு திட்ட விளையாட்டு மைதானத்தில், கடந்த மூன்று நாளாக நடந்த தேயிலை சுற்றுலா விழாவின் நிறைவு நிகழ்ச்சி, நேற்று மாலை நடந்தது.ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட உதவி திட்ட அலுவலர் கீதா வரவேற்றார். தேயிலை வாரிய இணை இயக்குனர் ஹரிபிரகாஷ் பேசுகையில்,""கடந்த மூன்று நாள் நடந்த நிகழ்ச்சியில், ஏராளமான இளைஞர், இளம் பெண்கள், தேயிலையில் உள்ள மருத்துவ குணம், அவற்றை தயாரிக்கும் விதம் குறித்து ஆர்வமுடன் அறிந்து சென்றனர்," என்றனர். நிகழ்ச்சிக்கு, தலைமை வகித்து மாவட்ட கலெக்டர் சங்கர் பேசுகையில்,"காடுகளும், மலைகளும் தான், ஒரு நாட்டின் மிக முக்கிய சொத்துகள். ஆப்பிள், செர்ரி, முள்ளங்கி, கேரட், நெல், கரும்பு உட்பட விளைப் பொருட்கள், மத்திய தரை கடல் மற்றும் தெற்காசிய காடுகளில் இருந்து தான் கிடைத்தன. "விவசாய நிலங்களின் வளர்ப்பு தாய்' எனப்படும் காடு, மலைகளை பாதுகாக்க வேண்டியது ஒவ்வொருவரின் கடமை. தேநீர் பருகுவதன் மூலம், புத்துணர்வு கிடைக்கும்; தவிர, நீலகிரி உட்பட மலைப்பகுதிகளில் புற ஊதா கதிர்கள் மூலம், உடலுக்கு ஏற்படும் பாதிப்பு, தேநீர் குடிப்பதன் மூலம் கட்டுப்படுத்தப்படும். உடல் பருமனை குறைக்க, இதய நோயை கட்டுப்படுத்த, ஞாபக சக்தி அதிகரிக்க தேநீர் மிகச் சிறந்த பானம். எனவே, தரமான தேநீரை ஒவ்வொருவரும் பருக வேண்டும்; அதுகுறித்த

விழிப்புணர்வை மற்றவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும்," என்றார். ஊட்டி நகராட்சி கமிஷனர் சிவக்குமார் உட்பட பலர் பங்கேற்றனர். சுற்றுலா அலுவலர் (கூடுதல் பொறுப்பு) விஜயகுமார் நன்றி கூறினார். முன்னதாக, ஊட்டி அரசு கலைக்கல்லூரி மாணவர்கள், பள்ளிக் குழந்தைகளின் நடனம், பல்லடம் யோனா குழுவினரின் மாயா ஜாலம், செண்டை மேளம் என, பல நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

பரிசுகளால் ஊக்குவிப்பு

* செய்தி மக்கள் தொடர்பு துறை சார்பில், நீலகிரி தேயிலை தொழில் மேம்பாட்டிற்கு அரசு வழங்கிய நலத்திட்டங்களை விளக்கும் புகைப்பட கண்காட்சி இடம் பெற்றிருந்தது. * தேயிலை வாரியம் சார்பில், பார்வையாளர்கள் அனைவருக்கும் "லெமன் டீ' இலவசமாக வழங்கப்பட்டது. * காட்சி அரங்கு அமைத்தவர்கள் துவங்கி, சுகாதாரப்பணி மேற்கொண்ட நகராட்சி நிர்வாகம், பாதுகாப்பு வழங்கிய காவல் துறை, பாரம்பரிய உணவு திருவிழா நடத்திய குழந்தைகள் வளர்ச்சி திட்டம், நெடுஞ்சாலை துறை, மேடை அமைப்பு, ஒலி அமைப்பு, நிகழ்ச்சி தொகுப்பாளர் என, அனைவருக்கும் நினைவு பரிசு வழங்கப்பட்டதால், அனைவரும் மனம் குளிர்ந்தனர்.

## <u>இயற்கை உரம் பயன்பாடு சிறுவிவசாயிகள் ஆர்வம்</u>

கோத்தகிரி : நீலகிரி மாவட்டத்தில் ரசாயன உரங்களுக்கு பதிலாக, இயற்கை உரங்களின் பயன்பாடு அதிகரித்துள்ளது. நீலகிரி மாவட்டத்தில், முத்தோரை பாலாடா, கப்பச்சி, கோடப்பமந்து, கேர்கம்பை, சுள்ளிகூடு மற்றும் கூக்கல்தொரை பகுதியில், தேயிலைக்கு அடுத்தப்படியாக, காய்கறி விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது. ரசாயன உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகளின் பயன்பாடு மற்றும் பருவம் தவறி பெய்யும் மழையின் காரணமாக, விவசாய நிலங்களில், மண்சத்து குறைந்துவருகிறது. இதனால், பயிர்கள் செழித்து வளருவது படிப்படியாக

குறைந்து, விவசாயிகளுக்கு எதிர்பார்த்த மகசூல் கிடைப்பதில்லை. அறுவடை செய்யப்படும் விளைப்பொருட்களுக்கும் சந்தையில் போதுமான விலை கிடைப்பதில்லை.தோட்டக்கலை துறை மூலம், காய்கறி விதைகளுக்கு மட்டுமே, 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. ஆனால், உரங்களுக்கு மானியம் இல்லை. இதனால், சாண உரம் உள்ளிட்ட, இயற்கை உரங்களை பயன்படுத்த, விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். தோட்டக்கலைத்துறை இணை இயக்குனர் மணி கூறுகையில், "இயற்கை உரங்களின் பயன்பாட்டை அதிகரிக்க செய்ய, பாத்தி, கூடாரம் அமைக்க, விவசாயிகளுக்கு, 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. மண்வளம் பாதிக்காத இவ்வகை உரங்கள் பயன்படுத்துவதால், மகசூல் அதிகரிக்கும் என்பதால், விவசாயிகள் மண்புழு உரம் தயாரிக்க, முன்வரவேண்டும்," என்றார்.

## <u>சிங்களாந்தபுரத்தில் 91 பயனாளிகளுக்கு விலையில்லா ஆடு</u>

துறையூர்: துறையூர் அடுத்த சிங்களாந்தபுரத்தில், அரசின் விலையில்லா ஆடுகள் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. நிகழ்ச்சிக்கு, எம்.எல்.ஏ., இந்திராகாந்தி தலைமை வகித்து, 91 பயனாளிகளுக்கு, தமிழக அரசின் விலையில்லா ஆடுகள் வழங்கினார். அ.தி.மு.க., ஒன்றிய செயலாளர் சேனை செல்வம், யூனியன் துணை தலைவர் பாலசுப்ரமணியன், பஞ்., தலைவர் நடராஜன், யூனியன் கவுன்சிலர் கலைச்செல்வி முன்னிலை வகித்தனர். கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர் பழனிச்சாமி வரவேற்றார். நிகழ்ச்சியில், துறையூர் வட்ட கூட்டுறவு விற்பனை யாளர்கள் சங்க தலைவர் மோகன்தாஸ், கால்நடை மருத்துவர் குணசேகரன், பஞ்., துணைத்தலைவர் ராஜதுரை, வக்கீல் அணி முகமது ரபீக், பாசறை கார்த்திக் உள்பட பலர் பங்கேற்றனர். உதவி இயக்குனர் ராஜசேகரன் நன்றி கூறினார்.

## பயிர் சாகுபடிக்கு தயார் நிலையில் உரங்கள் குறைதீர் கூட்டத்தில் அதிகாரிகள் தகவல்

திருச்சி: திருச்சி மாவட்டத்தில் பயிர் சாகுபடிக்கு தேவையான உரங்கள் தயார் நிலையில் கையிருப்பு உள்ளது என, குறைதீர் கூட்டத்தில் வேளாண் துறை அதிகாரிகள் தெரிவித்தனர். திருச்சி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில், மாதாந்திர விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடந்தது. இதில், விவசாயிகளின் பல்வேறு கேள்விகள் மற்றும் கோரிக்கைகளுக்கு அதிகாரிகள் கூறியதாவது: திருச்சி மாவட்டத்தில், ஆண்டு சராசரியாக, 762 மி.மீ., மழை பெய்ய வேண்டும். இதுவரை, 554 மி.மீ., மழை பெய்துள்ளது. கடந்தாண்டில், 3,77 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்கள், திருச்சி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்டது. நடப்பாண்டில், 5.55 லட்சம் டன்கள் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. குறுவை பருவத்தில் நெல், 8,107 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட் டது. மேலும், நடப்பு சம்பா பருவத்தில் டெல்டா பகுதிகளில், 87, 250 ஏக்கரிலும், டெல்டா இல்லாத பகுதிகளில், 62,750 ஏக்கரிலும் நெல் சாகுபடி செய்ய திட்டமிட்டு, இதுவரை டெல்டா பாசன பகுதிகளில், 88,198 ஏக்கரிலும், டெல்டா இல்லாத பகுதிகளில், 26,145 ஏக்கரிலும் நடவு பணி முடிந்துள்ளது. திருச்சி மாவட்டத்தில் டெல்டா பகுதிகளில், 82,750 ஏக்கரிலும், டெல்டா இல்லாத பகுதிகளில், 62,750 ஏக்கரிலும் சம்பா சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டு, பணிகள் நடந்து வருகிறது. இதுவரை டெல்டா பகுதி களில், 2,606 ஹெக்டேரில் திருந்திய நெல் சாகுபடி முறையிலும், 6,500 ஹெக்டேரில் சாதாரண முறையிலும், டெல்டா இல்லாத பகுதிகளில், 340 ஏக்கரில் நடவு பணி முடிந்துள்ளது. மேலும், சிறுதானியங்களான சோளம், 86,092 ஏக்கரிலும், மக்காசோளம், 25, 562 ஏக்கரிலும் பயிரிடப்பட்டுள்ளது. பயறு வகையான துவரை, 9,150 ஏக்கரிலும், நிலக்கடலை, 14, 675 ஏக்கரிலும், பருத்தி, 41, 605 ஏக்கரிலும் பயிரிடப்பட்டுள்ளது. நடப்பு பருவத்துக்கு தேவையான

உரங்கள் யூரியா, 45 மெட்ரிக் டன்னும், டி.ஏ.பி., 2,228 மெட்ரிக் டன்னும், பொட்டாஷ், 2,546 மெட்ரிக் டன்னும், கூட்டுரம், 5,610 மெட்ரிக் டன்னும், மாவட்ட தொடக்க வேளா ண்மை கூட்டுறவு வங்கி மற்றும் தனியார் உரக்கடைகளில் போதிய இருப்பு உள்ளது, என்று தெரிவித்தனர்.

**<u>கரும்பு சாகுபடியில் செங்குளத்துப்பட்டி விவசாயிகள் ஆர்வம்</u>**

வடமதுரை : வடமதுரை செங்குளத்துபட்டியில் பொங்கல் பண்டிகைக்காக கரும்பு பயிரிடுவதை சில விவசாயிகள் ஆர்வமுடன் ஆண்டுதோறும் செய்து வருகின்றனர். விவசாயி ஆர்.முத்துச்சாமி கூறுகையில்,"பொங்கலுக்கு 10 மாதங்களுக்கு முன்னர் விதைக் கரும்பை நடவு செய்வோம். தேவைப்படும் அளவில் அந்தந்த கால கட்டங்களில் உரமிட்டுவிடுவேன். கரும்பிற்கு வாரம் இரண்டு முறை நீர் பாய்ச்ச வேண்டும். கடும் வறட்சியால் கிணறுகள் வறண்டுவிட்ட சூழ்நிலையில், ஆழ்துளை அமைத்து நீர் எடுத்து பாசனம் செய்ததால், ஓரளவிற்கு கரும்பு திரட்சியாக வளர்ந்துள்ளது. பொங்கல் பண்டிகை வியாபாரத்திற்காக வரும் மொத்த வியாபாரிகளிடம் விற்பேன். பொங்கல் கரும்பு விவசாயத்தை ஏழாவது ஆண்டாக தொடர்ந்து செய்து வருகிறேன்.என்னை போல மேலும் பலரும் இப்பகுதியில் கரும்பு பயிரிட்டுள்ளனர்.' என்றார். கரும்பு விவசாயம் குறித்து விபரமறிய 80985-64700ல் தொடர்பு கொள்ளலாம்.

**<u>கால்நடைகளை பாதுகாக்கும் மூங்கில் கூண்டுகளுக்கு கிராக்கி</u>**

க.பரமத்தி: கரூரில் மூங்கில் கூடைகளுக்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளதால், 300 ரூபாய் வரை விற்கப்படுகிறது. தமிழகத்தில் ஆட்டுக்குட்டி, கோழிகளை பாதுகாப்பாகவும், காற்றோட்டமாகவும் வளர்க்க, மூங்கில் கூண்டுகள் பயன்படுத்தப்படுகிறது.இந்த ஆண்டு பெய்த மழை விவசாயிகளுக்கும், கால்நடை வளர்ப்பவர்களுக்கும்

பயனுள்ளதாக அமைந்துள்ளது. இதனால், ஆட்டுக்குட்டி, கோழிகளை வளர்க்கும் மூங்கில் கூண்டுகளுக்கு தேவை அதிகரித்துள்ளது. இதை பயன்படுத்தி ஈரோடு, சென்னிமலை, முத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள மூங்கில் கூண்டு பின்னும் தொழிலாளிகள், கிராமப்புறங்களுக்குச் சென்று, இரண்டு அடி முதல், 10 அடி வரை உள்ள மூங்கில் கூண்டுகள் தயாரித்து விற்பனை செய்கின்றனர். இரண்டரை அடி உயரமுள்ள கூண்டு, 300 ரூபாய்க்கும், அதற்கு மேல் தயாரிக்கும் கூண்டுகளுக்கு ஏற்ப, விலையில் விற்கப்படுகிறது. இது குறித்து, மூங்கில் கூண்டு தயாரிக்கும் தொழிலாளி சக்திவேல் கூறியதாவது: பருவமழை பெய்யாததால் கடந்த, 10 ஆண்டாக தொழில் நலிவடைந்துள்ளது. இந்த ஆண்டு பெய்த மழையால், கிராமப்புறங்களில் கூண்டுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது. அதனால், குடும்பத்துடன் கிராமப்புறங்களுக்கு சென்று, கூண்டுகள் தயாரித்து விற்பனை செய்கிறோம். இதனால், எங்களுக்கு நல்ல வருமானம் கிடைப்பதுடன், விவசாயிகள் கூண்டுகளுக்கு அலையும் வேலையும் மிச்சப்படுத்தப்படுகிறது.இவ்வாறு அவர் கூறினார்.

## <u>வாழை, மிளகாய் பயிருக்கு காப்பீடு செய்ய அழைப்பு</u>

சிவகங்கை : ""வாழை, மிளகாய் ராபி பருவ சாகுபடி செய்த விவசாயிகள் தங்கள் பயிர்களை காப்பீடு செய்ய ஜன.15க்குள் பிரீமிய தொகை செலுத்தவேண்டும்,'' என சிவகங்கை தோட்டக்கலை துணை இயக்குனர் பாலமுருகன் தெரிவித்தார். அவர் கூறியதாவது:ராபி பருவத்தில் சாகுபடி செய்துள்ள மிளகாய், வாழை பயிர்களுக்கு இன்சூரன்ஸ் செய்ய தேர்வு செய்யப்பட்டுள்ள வட்டாரங்கள் மற்றும் பிர்க்கா பட்டியல் தேசிய வேளாண் காப்பீட்டு நிறுவனத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில், 10 ஆயிரம் ஏக்கரில் மிளகாய் சாகுபடி, 1,250 ஏக்கரில் வாழை சாகுபடி நடக்கிறது. மிளகாய்: காப்பீடுக்கு தேர்வு செய்துள்ள வட்டாரங்கள் இளையான்குடி, காளையார்கோவில், மானாமதுரை,

எஸ்.புதூர், திருப்புவனம். ஏக்கருக்கு காப்பீடு தொகை ரூ.1,672. காப்பீடு திட்டத்தில் சேர கடன் பெறும் விவசாயிகள் ரூ.84, கடன் பெறாத விவசாயிகள் ரூ.75 பிரீமியம் செலுத்த வேண்டும். இக்காப்பீடு தொகைக்கு அதிகமாக காப்பீடு செய்ய விரும்பினால், கூடுதலாக ஏக்கருக்கு ரூ.251 செலுத்தினால், அதிக பட்சம் ரூ.4,179 வரை காப்பீடு செய்யலாம். வாழை: சிவகங்கையில் ஒக்கூர், தமறாக்கி பிர்க்கா, இளையான்குடியில் திருஉடையார்பட்டி பிர்க்கா, மானாமதுரையில் மானாமதுரை, முத்தனேந்தல், செய்களத்தூர் பிர்க்கா, சிங்கம்புணரி பிர்க்கா, திருப்புவனத்தில் கொந்தகை, திருப்பாச்சேத்தி, திருப்புவனம் பிர்க்காக் கள். பிரீமிய தொகை ஏக்கருக்கு இயல்பான காப்பீடு தொகை ரூ.5 லட்சத்து 17 ஆயிரத்து 751. காப்பீடு திட்டத்தில் சேர கடன் பெறும் விவசாயிகள் ரூ.12,944, கடன் பெறாத விவசாயிகள் ரூ.11,649 பிரீமியம் செலுத்த வேண்டும். இதற்கு கூடுதலாக காப்பீடு செய்ய விரும்பினால், ரூ.9 லட்சத்து 70 ஆயிரத்து 783 வரை மொத்த தொகைக்கு காப்பீடு செய்யலாம். கடன் பெறும் விவசாயிகள் ரூ.35,595, கடன் பெறாத விவசாயிகள் ரூ.34,301 செலுத்தவேண்டும். பயிர் காப்பீடு செய்ய விரும்பும் பயிர் கடன் பெறாத விவசாயிகள் ஜன.,15க்குள் தங்கள் கணக்கு வைத்திருக்கும் கூட்டுறவு வங்கி அல்லது தேசிய வங்கி மூலம் பிரீமிய தொகை செலுத்தலாம், என்றார்.

**தினகரன்**

**இன்றைய வேளாண் செய்திகள்**

## அறுவடை தொடங்க உள்ளதால் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை திறக்க வேண்டும்

காட்டுமன்னார்கோவில், - காட்டுமன்னார்கோவிலில் பெரும்பாலானோர் விவசாயிகள். இங்கு வடவாறு, வடக்கு ராஜன் வாய்க்கால், வீராணம் ஏரி

ஆகியவற்றின் மூலம் விவசாய பணிகள் நடைபெறுகிறது. நெற் பயிர் மிக முக்கியமானதாக கருதப்படுகிறது. இந்த பகுதியில் அறுவடை காலங்களில் விவசாயிகளிடம் இருந்து குறைந்த விலைக்கு தனியார் வியாபாரிகள், நெல் மூட்டை களை வாங்கி செல்வர். மேலும் வியாபாரிகள் கூடுதல் எடை வைத்து மூட்டைகளை விவசாயிகளிடம் இருந்து வாங்குகின்றனர். ஆட்கள் கூலி உயர்வு, உரவிலை உயர்வு, தண்ணீர் தட்டுப்பாடு, பூச்சி கொல்லி பாதிப்பு என பல்வேறு சிரமங்களுக்கு இடையே நெற் பயிரை விளைய செய்து விற்பனை செய்யும் விவசாயிகளுக்கு நெல் மூட்டையை குறைந்த விலைக்கு விற்பனை செய்வது பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. இதை கருத்தில் கொண்டு தமிழக அரசு சார்பில், விவசாயிகளின் நலன் கருதி நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் கிராமங்களில் திறக்கப்பட்டு அரசே நிர்ணயிக்கப்பட்ட விலையில் நெல் மூட்டை களை கொள்முதல் செய்து வருகின்றன. ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட கிராமங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அறுவடைக்கு சில நாட்களுக்கு முன்னர் திறக்கப்படுவது வழக்கம். இதே போன்று விரைவில் அறுவடைக்கு நெற் பயிர்கள் தயார் நிலையில் உள்ளதால் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை திறக்க வேண்டுமென விவசாயிகள் கேட்டு கொண்டுள்ளனர்.

**<u>கோலாரில் இருந்து சேலத்திற்கு காலிபிளவர் வரத்து தொடங்கியது</u>**

சேலம், :கர்நாடக மாநில கோலார் பகுதியில் இருந்து, சேலம் மார்க்கெட்டுக்கு காலிபிளவரின் வரத்து தொடங்கியுள்ளது. சேலம் மார்க்கெட்டுக்கு ஓசூர், ராயக்கோட்டை, தளி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து அதிகளவில் காளிபிளவர் வருகிறது. இதுதவிர கர்நாடக மாநிலம் கோலாரில் இருந்து டிசம்பர் மாதம் முதல் பிப்ரவரி வரை காளிபிளவர் வரத்து இருக்கும். இவை அளவில் பெரிதாகவும், அதிக சுவையுடையதாகவும் இருக்கக்கூடியவை. அங்கிருந்து லாரிகள் மூலம் கொண்டுவரப்படும் காலிபிளவர் மாவட்டத்தின் பிற பகுதிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

அதன்படி கோலாரில் இருந்து சேலம் மார்க்கெட்டுகளுக்கு வரும் காளிபிளவரின் வரத்து தற்போது தொடங்கியுள்ளது. அங்கிருந்து சேலம் மார்க்கெட்டுக்கு என, தினமும் 2 டன் அளவிற்கு காளிபிளவரின் வரத்து உள்ளது. தற்போது காலிபிளவர் பூவின் அளவிற்கு ஏற்ப ரூ.10 முதல் 30 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதுகுறித்து வியாபாரிகள் சிலர் கூறுகையில், மற்ற பகுதிகளில் இருந்து வரும், காலிபிளவரை விட கர்நாடக மாநில கோலாரில் இருந்து வரும் பூ அதிகளவில் விற்பனையாகும். தற்போது சீசன் தொடங்கியுள்ளதால், விலை அதிகரித்து விற்பனை செய்யப்படுகிறது. வரும் நாட்களில் அதன் வரத்து அதிகரித்து, குறைந்த விலைக்கு விற்பனை செய்ய வாய்ப்புள்ளது.

## ஈரோடு ஆவின் நிறுவனத்திற்குபால் வரத்து 2.44 லட்சம் லிட்டராக உயர்வு

ஈரோடு, :ஈரோடு ஆவின் நிறுவனத்திற்கு ஈரோடு மாவட்டம் மட்டுமின்றி திருப்பூர் மாவட்டத்தில் இருந்தும் பால் வரத்து இருந்து வருகிறது. ஈரோடு, திருப்பூர் ஆகிய மாவட்டங்களில் இருந்து 700க்கும் மேற்பட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள் மூலமாக பால் பெறப்பட்டு வருகிறது. நாள் ஒன்றுக்கு ஆவின் நிறுவனத்திடமிருந்து 53 ஆயிரம் லிட்டர் பால் சில்லரை விற்பனை மூலமாக விற்பனை செய்யப் படுகின்றது. மீதமுள்ள பால் மூலமாக பால் கோவா, நெய் போன்றவை தயாரிக்கப்பட்டு வெளிமாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப் படுகின்றது. இந்நிலையில், தனியார் பால் நிறுவனங்கள் பால் உற்பத்தியாளர்களுக்கு கூடுதல் விலை கொடுத்து கொள்முதல் செய்து வந்ததால் ஆவின் நிறுவனத்திற்கு வரும் பாலின் அளவு குறைந்து கொண்டே வந்தது. இந்நிலையில், கடந்த சில மாதங்களுக்கு முன்பு பால் கொள்முதல் விலையை லிட்டர் ஒன்றுக்கு ரூ.5 கூடுதலாக வழங்க உத்தரவிட்டதையடுத்து, மீண்டும் ஆவினுக்கு வரும் பாலின் அளவு அதிகரித்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். வழக்கமாக ஆவின் நிறுவனத்திற்கு நாள் ஒன்றுக்கு 2.5 லட்சம் லிட்டர் பால் வரத்து இருந்த

நிலையில், தற்போது அதிகபட்சமாக 2.44 லட்சம் லிட்டர் பால் வரத்து வர தொடங்கி உள்ளதாகவும், திருமணம் மற்றும் விசேஷ நாட்களில் மட்டும் வரத்து சற்று குறைவதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**<u>தேசிய வேளாண் பயிர்காப்பீட்டில் சேர விவசாயிகளுக்கு அழைப்பு</u>**

திருச்சி, : தேசிய வேளாண் பயிர் காப்பீடு திட்டத்தில் சேர விவசாயிகளுக்கு அக்ரிகல்ச்சர் இன்சூரன்ஸ் நிறுவனம் அழைப்பு விடுத்துள்ளது. இதுகுறித்து தேசிய வேளாண் பயிர் காப்பீடு திட்ட தலைமை மண்டல மேலாளர் பாரதி வஜ்ர வேலு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தமிழகத்தில் அனைத்து மாவட்டத்திலும் இந்தாண்டு 2014-15 ராபி மத்திய, மாநில அர சால் தேசிய வேளாண் காப்பீட்டு திட்டம் அக்ரிகல்ச்சர் இன்சூரன்ஸ் கம்பெனி ஆப் இந்தியா மூலம் அமல்படுத்தப்பட உள்ளது. நெல் நவரை, சோளம், கம்பு, ராகி, மக்காச்சோளம், துவரை, பச்சபயிறு, உளுந்து, கொள்ளு, நிலக்கடலை, எள்ளு, சூரியகாந்தி, மிளகாய், உருளை, வெங்காயம், பருத்தி, வாழை, குச்சி பயிர் (மர வள்ளி) கரும்பு என ராபி 2014-15 மூலம் 20 பயிர்களுக்கு தேசிய வேளாண் காப்பீடு திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட உள்ளது. இதில் துவரை, பச்சப்பயிறு, உளுந்து, நெல்தரிசு பருத்தி பயிர்களுக்கு காப்பீடு திட்டத்தில் சேர்வதற்கு பிப்ரவரி 15 கடைசி நாளாகும். சூரியகாந்தி, மிளகாய், வெங்காயம், பருத்தி, வாழை, மரவள்ளி ஆகியவற்றுக்கு ஜனவரி 15 கடைசி நாளாகும். நெல், சோளம், கம்பு, ராகி, மக்காச்சோளம், கொள்ளு, நிலக்கடலை, எள்ளுக்கு ஜனவரி 31 கடைசி நாளாகும். கரும்பு பயிருக்கு ஜூன் 15ம் தேதி கடைசி நாளாகும். உருளை பயிருக்கு காப்பீடு திட்டத்தில் சேர்வதற்கு ஏப்ரல் 15ம் தேதி கடைசி நாளாகும். பயிர்க்கடன் பெறா விவசாயிகள் பிரீமியத்தை செலுத்த சிட்டா அடங்கல் அல்லது கிராம நிர்வாக அலுவலர் சான்றிதழ் பெறப்பட்டு முன்மொழிவு படிவத்துடன் அவரவர் சேமிப்பு கணக்கு வைத்துள்ள வங்கியில் செலுத்த வேண்டும். முன்மொழிவு படிவங்களை

அருகில் உள்ள வேளா ண்துறை அல்லது கூட்டுறவு மற் றும் வர்த்தக வங்கியில் பெறலாம். ஒவ்வொரு தேர்ந்தெடுக்கப்பட்ட யூனியன் பிர்காவிலும் மாநில அரசின் விவசாய துறை யினால் பயிரி அறுவடை காலத் தில் பயிர் அறுவடை சோதனைகள் நடத்தப்படுகிறது. நடப்பு பருவத் தின் சராசரி மகசூலை 3 அல்லது 5 ஆண்டுகால உத்திரவாத மக சூலோடு ஒப்பிடும் போது நடப்பு பருவத்தின் மகசூல் எவ்வளவு குறைந்துள்ளதோ அந்த விகிதப்படி காப்பீடு செய்த அனைத்து விவசாயிகளுக்கும் அவரவர் தொகைக்கு ஏற்ப நஷ்டஈடு வழங்கப்படும். மேலும் விவரங்களுக்கு தலைமை மண்டல மேலாளர் அக் ரிகல்ச்சர் இன்சூரன்ஸ் கம்பெனி ஆப் இந்தியா, மண்டல அலுவலகம், ஆந்திரா இன்சூரன்ஸ் பில் டிங் முதல்தளம், தம்பு செட்டி தெரு, பாரிமுனை, சென்னை என்ற முகவரியில் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## நடப்பு பருவத்திற்கு தேவையான உரம் இருப்பு

திருச்சி, : திருச்சி கலெக்டர் அலுவலகத்தில் உள்ள குறைதீர்க்கும் நாள் கூட்ட அரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் டிஆர்ஓ தர்ப்பகராஜ் தலைமையில் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் டிஆர்ஓ தர்ப்பகராஜ் தெரிவித்ததா வது: திருச்சி மாவட்டத்தில் டிசம்பர் மாதம் முடிய பெய்ய வேண்டிய மழை யின் சராசரி அளவு 762 மி. மீட்டரில் இதுவரை பெய்த மழையின் அளவு 554 மி.மீ. ஆகும். இதே மாதத்தில் கடந்த ஆண்டு 518.61 மி.மீ. மழை பெய்துள்ளது. சென்ற ஆண்டு நமது மாவட்டத் தில் 3.77 லட்சம் மெ.டன் கள் உணவு தானியங்கள் உற்பத்தி செய்யப்பட்டது. இந்த ஆண்டு 5.55 லட்சம் மெ.டன்கள் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 8,107 ஏக்கரில் குறுவை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டு டெல்டா பகுதிகளில் 87,250 ஏக்கரிலும், டெல்டா அல்லாத பகுதிகளில் 62,750 ஏக்கரிலும் சம்பா சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டு இதுவரை டெல்டா பாச னப் பகுதிகளில் 88,198 ஏக்கரிலும், டெல்டா அல் லாத பகுதிகளில்

26,145 ஏக் கரிலும் நடவுப்பணி முடிந்துள்ளது. சிறுதானியங்க ளான சோளம் 86,092 ஏக்கரிலும், மக்காசோளம் 25,562 ஏக்கரிலும் பயிரிடப் பட்டுள்ளது. பயிறுவகை பயிரான துவரை 9,150 ஏக் கரிலும், நிலக்கடலை 14,675 ஏக்கரிலும், பருத்தி 41,605 ஏக்கரிலும் பயிரிடப்பட்டுள்ளது. நடப்பு பருவத்திற்கு தேவையான உரங்கள் யூரியா 45 மெ.டன்னும், டிஏபி 2,228 மெ.டன்னும், பொட்டாஷ் 2,546 மெ. டன்னும் மற்றும் கூட்டுரம் 5,610 மெ.டன்னும் இம்மாவட்டத்திலுள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி மற்றும் தனியார் உரக்கடைகளில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. 500 எக்டர் பரப்பில் புதிய பரப்பில் பழமரச் செடிகள், பூச்செடிகள், நறுமணப்பயிர்கள் ஆகியவற்றை கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது. வேளாண் பொறியியல் துறையின் சார்பில் நிலமேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மண்தள்ளும் இயந்திரம் வாடகைக்கு விட வேண்டிய ஆண்டு இலக்கு 4,400 மணி நேரம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றார். கூட்டத்தில் வேளாண் இணை இயக்குநர் (பொ) செல்வராஜ், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்) பாண்டியராஜன், தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் தமிழ்களஞ்சியம், மின் வாரிய கண்காணிப்புப் பொறியாளர் (பொ) சம்பத், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் மிரு ணாளினி, விவசாய சங்க பிரதிநிதிள் உள்ளிட்ட திர ளான விவசாயிகள் கலந்துகொண்டனர்.

## <u>அரியலூர் மாவட்டத்தில் இன்று கால்நடைகளுக்கு இலவச குடற்புழு நீக்க முகாம்</u>

அரியலூர், : அரியலூர் மாவட்டத்தில் கால்நடைகளுக்கு இலவச குடற்புழு நீக்க முகாம் இன்று நடைபெற உள்ளது என கலெக்டர் தெரிவித்துள்ளார். அரியலூர் மாவட்ட கலெக்டர் சரவணவேல்ராஜ் ஒரு செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது: தமிழக அரசின் மூலம் 15.9.2011ல் தொடங்கப்பட்ட விலையில்லா கறவை பசுக்கள் மற்றும் வெள்ளாடு, செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டங்களில் அரியலூர்

மாவட்டத்தில் 2011-12ம் ஆண்டிற்கு 150 பயனாளிகளுக்கு 150 கறவை பசுக்களும், 1906 பயனாளிகளுக்கு 7 ஆயிரத்து 624 வெள்ளாடுகளும், 2012-13ம் ஆண்டிற்கு 150 பயனாளிகளுக்கு 150 கறவை பசுக்களும், 2ஆயிரத்து 593 பயனாளிகளுக்கு 10 அயிரத்து 372 வெள்ளாடுகளும், 2013-14ம் ஆண்டிற்கு 150 பயனாளிகளுக்கு 150 கறவை பசுக்களும் 2ஆயிரத்து 770 பயனாளிகளுக்கு 11 ஆயிரத்து 80 வெள்ளாடுகளும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 2014-15ம் ஆண்டில் நவம்பர் 2014 முடிய 150 பயனாளிகளுக்கு 150 கறவை பசுக்களும் ஆயிரத்து 520 பயனாளிகளுக்கு 6ஆயிரத்து 80 வெள்ளாடுகளும் வழங்கப்பட்டுள்ளன. இந்த திட்டங்கள் மூலம் பயன்பெறும் பயனாளிகள் தங்கள் கால்நடைகளை நன்கு பராமரிக்க வேண்டும் என வலியுறுத்தி பயனாளிகளை ஊக்கப்படுத்தும் பொருட்டு 2011-12 மற்றும் 2012-13ல் கால்நடைகளை சிறப்பாக பராமரித்த பயனாளிகளுக்கு மேற்படி ஆண்டுகளில் தமிழ் புத்தாண்டு தினத்தில் பரிசுகளும் வழங்கப்பட்டுள்ளன. மேலும் பயன்பெற்ற விவசாயிகள் அரசு வழங்கப்பட்ட கறவை பசுக்களின் பால் உற்பத்தித் திறனை பெருக்கவும் வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளின் எடையினை அதிகரிக்கவும், தமிழகம் முழுவதும் இன்று (27ம் தேதி) கறவைப் பசுக்களுக்கு, இனப்பெருக்க மருத்துவ பரிசோதனையும் வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாமும் நடைபெற உள்ளது. மேலும் இத்திட்டத்தில் பயன்பெற்ற பயனாளிகள் மட்டுமில்லாமல் அனைத்து விவசாயிகளும் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளலாம் என அரியலூர் கலெக்டர் தெரிவித்துள்ளார்.

## <u>பெரம்பலூரில் மரம் வளர்க்க விவசாயிகளுக்கு தொழில் நுட்ப பயிற்சி</u>

பெரம்பலூர், : தமிழ்நாடு வனத்துறையின் பெரம்பலூர் கோட்டம் சார்பாக, தமிழ் நாடு உயிர்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்கல் திட்டம் மற்றும் தனியார் நிலங்களில் மரம் வளர்ப்புத் திட்டம், தரம் குன்றிய வன நிலங்களில் நீர் வனப்பாதுகாப்பு மற்றும் வன

முடிப்பரப்பை அதிகரித்தல், நபார்டு திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கான மரம்வளர்க்கும் தொழில்நுட்பம் குறித்த பயிற்சி பெரம்பலூரில் நடந்தது. வனச்சரக அதிகாரி தர்மலிங்கம் வரவேற்றார். பயிற்சியை பெரம்பலூர் மாவட்ட வன அதிகாரி ஏழுமலை துவக்கிவைத்து, தனியார் நிலங்களில் மரம் வளர்ப்பு, நபார்டு திட்டம், பயிற்சி செயல்பாடுகள் குறித்து விளக்கிப் பேசினார். வனச்சரக அதிகாரி பாலகிருஷ்ணன் வன வளர்ப்பின் முக்கியத்துவம், பல்லுயிர் பாதுகாப்புப் பணியில் விவசாயிகளின் பங்கேற்பு குறித்து விளக்கிப் பேசினார். பெரம்பலூர் ரோவர் கல்லூரியின் வனவியல் பேராசிரியர் ஆனந்தன் மரங்களைத் தாக்கும் நோய்கள் மற்றும் அதனைத் தடுக்கும் முறைகள் குறித்தும், பெரம்பலூர் மாவட்ட சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர் கோபால் இன்றைய சூழலில் வன உயிரினப் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்தும் விளக்கிப்பேசினர். சுற்றுச்சூழல் ஆர்வலர் கருணாநிதி அரிய வகை மரக்கன்றுகள் வழங்கி, அதனை வளர்க்கும் தொழில் நுட்பம் குறித்துப் பேசினார். மேலும் வனச்சரக அதிகாரி தர்மலிங்கம், நாற்றங்கால், தோட்டங்கள் எழுப்புதல் குறித்துப் பேசினார். இப்பயிற்சியில் வனவர்கள், வனக்காப்பாளர்கள், வனக்காவலர்கள், விவசாயிகள் உள்ளிட்டப் பலரும் கலந்துகொண்டனர். முடிவில், வனச்சரக அதிகாரி ரவீந்திரன் நன்றி தெரிவித்தார்.

## <u>மார்கழி பட்ட கடலை சாகுபடியில் கூடுதல் மகசூல் பெறுவது எப்படி?</u>

அன்னவாசல், : நடப்பு மார்கழி பட்டத்தில் நிலக்கடலை சாகுபடியில் அதிக அளவில் கூடுதலாக மகசூல் செய்வது எப்படி? என்பது குறித்து வேளாண் இயக்குநர் வெள்ளைச்சாமி தகவல் தெரிவித்துள்ளார். புதுக்கோட்டை மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக பரவலாகப் பெய்த மழையைப் பயன்படுத்தி விவசாயிகள் தற்போது மார்கழி பட்டத்துக்கான நிலக்கடலையை அதிக அளவில் சாகுபடி செய்துள்ளனர். இதில் கூடுதல் மகசூல் பெறுவதற்கான வழிமுறைகளை குடுமியான்மலை மாநில வேளாண் மேலாண் பயிற்சி நிலைய இயக்குநர் வெள்ளைச்சாமி

கூறியதாவது: தமிழகத்தில் பயிரிடப்படும் எண்ணெய் வித்துப் பயிர்களில் மிக முக்கியமானது நிலக்கடலையாகும். “கண்டு பூப் பூத்து காணாமல் காய் காய்க்கும்” என்னும் மொழிக்கேற்ப அதிசயப் பயிராகத் திகழும் நிலக்கடலை ஆண்டுதோறும் சராசரியாக 5.35 லட்சம் எக்டேர் பரப்பளவில் பயிர் செய்யப்பட்டு வருகிறது. நிலக்கடலை மானாவாரியாகவும் இறவைப் பயிராகவும் பயிரிடப்பட்டு வந்தாலும் இறவைப் பயிராக மார்கழி பட்டத்தில் நிலவும் பயிர் வளர்ச்சிக்கு உகந்த தட்பவெட்பநிலையும் பூச்சி நோய்கள் குறைவாக தாக்குவதும் ஆன சூழ்நிலை நல்ல மகசூலைத் தருகிறது. மார்கழிப் பட்டத்துக்கு ஏற்ற நிலக்கடலை ரகங்கள் டிஎம்வி 7, கோ 2, கோ3, கோ4, விஆர்ஐ 6 மற்றும் டிஎம்வி 13 ஆகியன திகழ்கின்றன. ஏக்கருக்கு 50 முதல் 55 கிலோ விதைப் பருப்புகள் தேவைப்படும். சான்று பெற்ற தரமான விதைகளைப் பயன்படுத்துவதே சிறந்தது. மண் வழியாக பரவும் நோய்களை தடுக்க ஒரு கிலோ விதை பருப்புக்கு கார்பெண்டசிம் 2 கிராம் அல்லது மாங்கோசெப் 4 கிராம் அல்லது டிரைக்கோ டெர்மா விரிடி 4 கிராம் என்ற அளவில் ஏதாவது ஒன்றை விதைப்பு செய்வதற்கு குறைந்தது 24 மணி நேரத்துக்கு முன்பாக விதை நேர்த்தி செய்ய வேண்டும். மண்ணில் இருந்து தாக்கும் பூச்சிகளைத் தடுக்க அதாவது வெள்ளை வேர்ப்புழு மற்றும் கரையான் தாக்குதலைத் தடுக்க ஒரு கிலோ விதைப் பருப்புக்கு 12.5 மிலி குளோர்பைரிபாஸ் 20 ஈ.சி மருந்தை விதை நேர்த்தி செய்து விதைப்புக்கு பயன்படுத்தலாம். சாறு உறிஞ்சும் பூச்சிகளான இலைப்பேன், தத்துப்பூச்சி, மாவுப்பூச்சி ஆகியன இளஞ்செடிகளைத் தாக்கி சேதப்படுத்தாமல் இருக்க ஒரு கிலோ விதைக்கு 5 கிராம் இமிடாகுளோபிரிட் 600 எப்.எஸ் மருந்தை விதை நேர்த்தி செய்து விதைக்கலாம். உயிர் உரங்களான ரைசோபியம், பாஸ்போ பாக்டீரியா, அசோஸ் பைரில்லம் ஆகியவற்றை தலா 3 பொட்டலம் வீதம் ஆறிய அரிசிக் கஞ்சியில் கலந்து ஒரு எக்டேரு க்கு தேவையான விதைப் பருப்புடன் நேர்த்தி செய்வதன் மூலம் விண்ணிலும், மண்ணிலும் உள்ள

தழை மற்றும் மணிச்சத்துகள் பயிருக்கு குறைந்த செலவில் கிடைக்கும். வரிசைக்கு வரிசை 30 செ.மீ. மற்றும் செடிக்கு செடி 10 செ.மீ. இடைவெளியில் சீராக 5 செ.மீ. ஆழத்தில் விதைப்பு செய்வதன் மூலம் ஒரு சதுர மீட்டரில் 33 செடிகளை அதாவது ஒரு சைக்கிள் டயர் வட்டத்துக்குள் 11 செடிகளைப் பராமரிக்கலாம். இது நிலக்கடலை மகசூலுக்கு மிகவும் முக்கியம். நன்கு மக்கிய தொழு உரம் ஏக்கருக்கு 5 மெ.டன் என்ற அளவில் கடைசி உழவுக்கு முன்பாக இட வேண்டும். தொழு எரு இல்லாத நிலையில் நன்கு மக்கிய தென்னை நார்க் கழிவு, கோழி எரு, மண்புழு உரம் இவற்றில் ஏதாவது ஒன்றை ஏக்கருக்கு 2 டன் என்ற அளவில் இடலாம். ரசாயன உரங்களான யூரியா 15 கிலோ சூப்பர் பாஸ்பேட் 88 கிலோ பொட்டாஷ் 35 கிலோ ஆகியவற்றை ஒரு ஏக்கருக்கு அடியுரமாக இடலாம். சூப்பர் பாஸ்பேட் கிடைக்காவிட்டால் டி.ஏ.பி31 கிலோ, யூரியா 3 கிலோ, பொட்டாஷ் 35 கிலோ ஆகியவற்றை இடலாம். விதைப்பு செய்த 40 முதல் 45வது நாளுக்குள் 2ம் களை எடுத்த பிறகு ஏக்கருக்கு 160 கிலோ ஜிப்சம் உரமிட்டு மண் அணைக்கவும். நிலக்கடலை நுண்ணூட்டக் கலவை உரத்தை ஏக்கருக்கு 5 கிலோ வீதம் மணலில் அல்லது மக்கிய தொழு உரத்துடன் கலந்து விதைத்த பின் சீராக இட வேண்டும். நுண்ணூட்டக் கலவை கிடைக்காத நிலையில் துத்தநாகம் குறைவாக உள்ள மண்ணில் ஏக்கருக்கு 10 கிலோ துத்தநாக சல்பேட் உரத்தை தொழு உரத்துடன் கலந்து அடியுரமாக இடலாம். அல்லது 0.5 சதவிகித துத்த நாக சல்பேட் கரைசலை விதைப்பு செய்த 30, 40ம் நாளில் இலை வழியாக தெளிக்கலாம். போரான் குறைபாடுள்ள மண்ணில் ஏக்கருக்கு 4 கிலோ வீதம் போராக்ஸ் அடியுரமாக இடுவதால் பொக்கற்ற திரட்சியான நிலக்கடலை விளைச்சல் பெறலாம். அதிக பூ பிடிக்கவும், குறைவான பொக்கு கடலைகள் வறட்சியைத் தாங்கி வளர்ந்து விளைச்சலில் 15 சதவிகிதம் வரை கூடுதல் மகசூல் பெற தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக தயாரிப்பான நிலக்கடலை ரிச் என்ற

பூஸ்டரை ஏக்கருக்கு 200 லிட்டர் நீரில் 2 கிலோ 200 கிராம் என்ற அளவில் கலந்து பூக்கும் மற்றும் காய்ப்பிடிக்கும் தருணம் கைத்தெளிப் பான் கொண்டு தெளிக்கலாம். இத்தகைய வழிமுறைகளை முறையாகக் கையாண்டால் மார்கழிப் பட்ட கடலை சாகுபடியில் அதிக மகசூல் பெறலாம் என்றார்.

## <u>ரபி பருவ பயிர்களான நெல், வாழை, கரும்பு பயிருக்கு விவசாயிகள் காப்பீடு செய்யலாம் ஜனவரி 31ம் தேதி கடைசி நாள்</u>

தஞ்சை, : தஞ்சை மாவட்டத்தில் ரபி பருவ பயிர்களான நெல், வாழை, கரும்பு உள்ளிட்ட பயிர்களுக்கு காப்பீடு செய்ய வரும் ஜனவரி 31ம் தேதி கடைசி நாளாகும். இதுகுறித்து பயிர் காப்பீட்டு திட்ட மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பழனியப்பன் தெரிவித்திருப்பதாவது: ரபி பருவ பயிர்களான நெல், உளுந்து, பயிறு, எள், சோளம், வாழை, கரும்பு, கடலை, பருத்தி, மிளகாய், வெங்காயம், கம்பு, மக்காச்சோள பயிர்களுக்கு காப்பீடு செய்யலாம். தஞ்சை மாவட்டத்தில் ஒரத்தநாடு, திருவோணம், திருவிடைமருதூர், கும்பகோணம், திருப்பனந்தாள், பாபநாசம், அம்மாப்பேட்டை, மதுக்கூர் ஆகிய தாலுகாவை சேர்ந்த விவசாயிகள் மற்றும் தஞ்சையில் நாஞ்சிக்கோட்டை வருவாய் சரகம், பேராவூரணியில் குறிச்சி, ஆவனம் வருவாய் சரகம், பட்டுக்கோட்டையில் அதிராம்பட்டினம், பட்டுக்கோட்டை வருவாய் சரகம் ஆகிய பகுதியை சேர்ந்த கோடை நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளும் இந்த திட்டத்தில் சேரலாம். ஒரு ஏக்கருக்கு ரூ.20,578 காப்பீடு செய்ய கடன் வாங்கும் விவசாயிகள் ஏக்கருக்கு ரூ.206 பிரீமியமும், கடன் வாங்காத சிறு, குறு விவசாயிகள் ஏக்கருக்கு ரூ.185 பிரீமியமும் செலுத்த வேண்டும். இந்த திட்டத்தில் கடன் வாங்கும் விவசாயிகள் வரும் பிப்ரவரி 28ம் தேதிக்குள்ளும், கடன் வாங்காத விவசாயிகள் ஜனவரி 31ம் தேதிக்குள்ளும் சேர வேண்டும். வாழையை பொறுத்தவரை தஞ்சை

வட்டாரத்தில் நாஞ்சிக்கோட்டை, கண்டியூர் ஆகிய வருவாய் பகுதி, திருவையாறு, நடுக்காவேரி வருவாய் சரகம், அகரப்பேட்டை, திருக்காட்டுப்பள்ளி வருவாய் சரகம், ஒரத்தநாட்டில் தெக்கூர் வருவாய் சரகம், திருவிடைமருதூரில் முருக்கங்குடி, திருவிடைமருதூர், ஆடுதுறை, நாச்சியார்கோயில் ஆகிய வருவாய் சரகங்கள். கும்பகோணத்தில் தேவனாஞ்சேரி, சோழன்மாளிகை, கும்பகோணம், கதிராமங்கலம் ஆகிய வருவாய் சரகங்கள். பாபநாசத்தில் அய்யம்பேட்டை, கபிஸ்தலம், பாபநாசம் ஆகிய வருவாய் சரகங்கள். பேராவூரணியில் ஆவனம் வருவாய் சரகம் ஆகிய பகுதியை சேர்ந்த விவசாயிகள் காப்பீடு செய்யலாம். ஒரு ஏக்கர் பயிருக்கு ரூ.5,17,751க்கு காப்பீடு செய்ய 5 சத பிரீமியத்தில் மானியம்போக கடன் வாங்கும் விவசாயிகள் ஏக்கருக்கு ரூ.12,944, கடன் வாங்காத விவசாயிகள் ஏக்கருக்கு ரூ.11,649 பிரீமியம் செலுத்த வேண்டும். கடன் வாங்கும் விவசாயிகள் பிப்ரவரி 28ம் தேதிக்குள்ளும், கடன் வாங்காத விவசாயிகள் ஜனவரி 15ம் தேதிக்குள்ளும் பிரீமியம் செலுத்த வேண்டும். மற்ற பயிர்களை பற்றி விபரம் தெரிந்து கொள்ள தொடர்புடைய கூட்டுறவு வங்கிகள் அல்லது 94437-80661 என்ற செல்போன் எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

## குதிரைக்குளம் கிராமத்தில் பண்ணை பள்ளி துவக்கம்

தூத்துக்குடி, : குதிரைக்குளம் கிராமத்தில் தோட்டக்கலைத்துறை சார்பில் காய்கறி பயிரில் துல்லியப்பண்ணையம் என்ற பண்ணை பள்ளி துவங்கப்பட்டது. ஓட்டப்பிடாரம் அருகே உள்ள குதிரைக்குளம் கிராமத்தில் தோட்டக்கலைத் துறை மூலம் அட்மா நிதி உதவியின் கீழ் காய்கறி பயிரில் துல்லியப்பண்ணையம் என்ற பண்ணை பள்ளி துவங்கப்பட்டது. இப்பண்ணைப்பள்ளி துவக்கவிழா பஞ்சாயத்து தலை வர் அண்ணாமலை முன்னிலையில் நடந்தது.ஓட்டப்பிடாரம் தோட்டக்கலை உதவி இயக்குநர் பழனிவேலாயுதம், ஓட்டப்பிடாரம் வேளாண்மை உதவி இயக்குநர் வேல்குமார், கோவில் பட்டி நடமாடும்

மண் மாதிரி ஆய்வக வேளாண்மை அலுவலர் செல்வம், அட்மா தொழில்நுட்ப வல்லுநர் சுடலைமணி ஆகியோர் பயிற்சியளித்தனர். 25 விவசாயிகள் பயிற்சியில் பங்கேற்றனர். பண்ணைப்பள்ளியின்போது, சண்முகய்யா என்பவர் தோட்டத்தில் 2.5 ஏக்கர் நிலம், தேர்வு செய்யப்பட்டு, மண்மாதிரி சேகரிக்கும் செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட் டது. காய்கறி உற்பத்தி யாளர் மற்றும் விற்பனை யார் ஆர்வலர்க்குழு விவசாயிகள் இப்பண்ணைப்பள்ளியில் கலந்து கொண் டனர். இப்பண்ணை பள்ளி யில், கத்திரி, தக்காளிப்பயிர் மகசூல் அதிகரிக்க தொடர்ந்து இப்பயிரினை சாகுபடி செய்து வகுப்புகள் நடத்தி செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்படும். இந்த பண்ணைப்பள்ளிக் கான ஏற்பாட்டினை உதவி தோட்டக்கலை அலு வலர் மகேஷ்குமார், அட்மா திட்ட கள அலுவலர் செல்வகுமார் செய்திருந்தனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>காற்றழுத்த தாழ்வு பகுதி அதே இடத்தில் நீடிப்பு: வட கடலோர மாவட்டங்களில் இன்று கனமழை பெய்யும் வானிலை ஆய்வு மையம் தகவல்</u>**




தென்மேற்கு வங்கக்கடல் பகுதியில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி அதே இடத்தில் நீடிப்பதால் வட கடலோர மாவட்டங்களில் இன்று (திங்கட்கிழமை) கனமழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம்தெரிவித்துள்ளது. வேதாரண்யத்தில் 2 செ.மீ. மழை

தமிழகத்திற்கு அதிக மழைப்பொழிவை தருகிற வடகிழக்கு பருவமழை கடந்த அக்டோபர் மாதம் முதல் தொடங்கியது. இதன் காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியில் கடந்த சில நாட்களாக சீரான இடை வெளியில் அவ்வப்போது மழை பெய்து வருகிறது. நேற்று காலை 8.30 மணியோடு நிறைவடைந்த 24 மணி நேர நிலவரப்படி வேதாரண்யத்தில் 2 செ.மீ. மழையும், காரைக்கால், நாகப்பட்டினம் மற்றும் பாம்பனில் தலா ஒரு செ.மீ. மழையும் பதிவாகி உள்ளது. தமிழகம்-புதுச்சேரி தென்மேற்கு வங்கக்கடலில் நிலைகொண்டிருந்த குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி அதே இடத்தில் நீடிப்பதால் சென்னை, காஞ்சீபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், நாகபட்டினம், புதுக்கோட்டை, நெல்லை, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி உள்ளிட்ட கடலோர மாவட்டங்களிலும், புதுச்சேரியிலும் அடுத்த 24 மணி நேரத்தில் மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கனமழை

இதுகுறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியதாவது:- இலங்கையை ஒட்டியுள்ள தென்மேற்கு வங்கக்கடல் பகுதியில் நிலைகொண்டிருந்த குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி அதே இடத்தில் தொடர்ந்து நீடிக்கிறது. இதன் காரணமாக தமிழகத்தின்வட கடலோர மாவட்டங்களில் அடுத்த 24 மணி நேரத்தில் கனமழை பெய்யக் கூடும். தென் கடலோர மாவட் டங்கள் மற்றும் புதுச்சேரியில் அநேக இடங்களிலும், உள் மாவட்டங்களில் ஒரு சில இடங்களிலும் மழை பெய்வ தற்கு வாய்ப்பு உள்ளது. சென்னையை பொருத்த மட்டில் வானம் மேகமூட் டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில இடங்களில் இடியுடன் கூடிய கன மழை பெய்வதற்கு வாய்ப்பு உள்ளது.இவ்வாறு அவர்கள் கூறினர்.

## <u>பாலமேடு பகுதியில் மருத்துவ குணமிக்க நாட்டு சுண்டைக்காய் ?விளைச்சல் குறைவு</u>



பாலமேடு பகுதியில் மருத்துவ குணமிக்க நாட்டு சுண்டைக்காய் விளைச்சல் குறைந்து வருவதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

விளைச்சல்குறைவு

தமிழ் மருத்துவத்தில் காய்கறிகளுக்கு மிக முக்கிய இடம் உண்டு, அதில் இயற்கையாக விளைச்சல் பெறும் காய்களில் நாட்டுச்சுண்டைக்காயும் ஒன்று. மருத்துவ குணமிக்க இந்த நாட்டு சுண்டைக்காய் மதுரை மாவட்டம், அழகர்மலை அடிவாரம், பாலமேடு மஞ்சமலை பகுதி, மற்றும் வகுத்துமலை அடிவாரம் போன்ற பகுதிகளில் அதிக அளவில் வளர்ந்து வருகிறது. ஒவ்வொரு வருடமும் நவம்பர் மாதம் தொடங்கி ஜனவரி மாதம் வரை சுண்டைக்காய் விளைச்சலாகிறது. மலை அடிவாரப்பகுதிகளில் விளையும் இந்த சுண்டைக்காய்களை கிராமத்து மக்கள் பக்குவப்படுத்தி, பலவகைகளில் உணவுகளில் பரிமாறுகின்றனர். வத்தல், குழம்புக்காய், பொரித்தல் போன்ற பல்சுவையுடன் இருக்கும் இந்த வகை மருத்து காய்களின் விளைச்சல் தற்போது குறைந்து வருதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

உற்பத்திநடவடிக்கை

தற்போது கிராமங்களிலும் மலைப்பகுதிகளிலும் சுண்டைக்காய் அறுவடை செய்யப்பட்டு வருகிறது. இயற்கையாய் விளையக்கூடிய இந்த சுண்டைக்காய் நவம்பர் மாதம் அறுவடை தொடங்கி ஜனவரி முதல்வாரத்தில் முடியும். தற்போது ஒருபடி சுண்டைக்காய் ரூ.40-க்கு விற்பனையாகிறது. நாட்டு சுண்டைக்காயான இது முழுக்க முழுக்க கசப்பு தன்மை உடையது. இந்த காய் சர்க்கரை நோயை கட்டுப்படுத்தும், இயற்கையாக விளையக்கூடிய இந்த வகை காய்கள் வறட்சியை தாங்க கூடியதாகும். ஆண்டுக்கொருமுறை அறுவடையாகும் உணவுக்காயும் இது தான். காலப்போக்கில் இந்த காயானது அழிந்து வரும் சூழ்நிலை உருவாகி உள்ளது. இதை வனத்துறை, வேளாண்துறை இணைந்து பாதுகாத்து பயிரிட்டால் மருத்துவகுணம் நிறைந்த சுண்டைக்காயை

வரும் சந்ததியினரும் தெரிந்து கொண்டு பயன்பெறுவார்கள். அந்த வகையில் இதன் உற்பத்தியை பெருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சம்பந்தபட்ட துறையினருக்கு பொதுமக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

## உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 844 பயனாளிகளுக்கு நல உதவிகள் பெரம்பலூர் மாவட்ட வருவாய் அதிகாரி வழங்கினார்



முதல்–அமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 844 பயனாளிகளுக்கு ரூ.23 லட்சத்து 27 ஆயிரத்து 950 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட வருவாய் அதிகாரி ராஜன்துரை வழங்கினார்.

நலத்திட்டஉதவிகள்

பெரம்பலூர் மாவட்டத்தில் முதல்–அமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது. இளம்பை தமிழ்ச்செல்வன் எம்.எல்.ஏ. முன்னிலை வகித்தார். மாவட்ட வருவாய் அதிகாரி ராஜன்துரை தலைமை தாங்கி பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கிபேசியதாவது:–

முதல்–அமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பெருக்கும் வகையில் கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை, இயற்கை மரண, விபத்து மரண உதவித்தொகை உள்ளிட்ட உதவித்தொகை திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தில் பதிவு செய்து கொள்ள கட்டணம் ஏதும் வசூலிக்கப்படுவதில்லை. கிராம நிர்வாக அலுவலரிடம் குடும்ப உறுப்பினர்கள், வயது, தொழில், நில அளவு, குடும்ப அட்டை எண் போன்ற விபரங்களை தெரிவித்து பதிவு செய்து கொள்ளலாம்.

திருமணஉதவித்தொகை

இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களுக்கும், அவர்களின் குடும்பத்தாருக்கும் திருமண உதவித்தொகையாக ஆணுக்கு ரூ.8 ஆயிரமும், பெண்ணுக்கு ரூ.10 ஆயிரமும் வழங்கப்படுகிறது. விபத்து மரண உதவித்தொகையாக ரூ.1 லட்சமும், படிப்பிற்கு ஏற்ப கல்வி உதவித்தொகைகளும் மேலும் பல்வேறு உதவித்தொகைகளும் வழங்கப்பட்டு வருகின்றன. நாட்டின் முதுகெலும்பாகிய விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு வழங்கப்படும் நலத்திட்டங்களை பொதுமக்கள் பயன்படுத்தி கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.நிகழ்ச்சியில் கல்வி உதவித்தொகையாக 784 பயனாளிகளுக்கு ரூ.17 லட்சத்து 4 ஆயிரத்து 950–க்கான காசோலைகளும், திருமண உதவித்தொகையாக 29 பயனாளிகளுக்கு ரூ.2 லட்சத்து 38 ஆயிரத்துக்கான காசோலைகளும், இயற்கை மரண உதவித்தொகையாக 31 பயனாளிகளுக்கு ரூ.3 லட்சத்து 85 ஆயிரத்திற்கான காசோலைகளும் என மொத்தம் 844 பயனாளிகளுக்கு ரூ.23 லட்சத்து 27 ஆயிரத்து 950 மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர்கள் ஜெயலட்சுமி, வெண்ணிலா, கலெக்டரின் நேர்முக உதவியாளர் மாரிமுத்து, உதவி கலெக்டர் (பொறுப்பு) பன்னீர் செல்வம், சமூக பாதுகாப்பு திட்ட தனித்துணை கலெக்டர் முருகேஸ்வரி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## <u>ஆத்தூர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ரூ.30 லட்சத்திற்கு மஞ்சள் ஏலம்</u>



ஆத்தூர் புதுப்பேட்டையில் உள்ள வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் மஞ்சள் ஏலம் நேற்று நடந்தது. இதில்

விரலி ரக மஞ்சள் குவிண்டாலுக்கு ரூ.6,669 முதல் ரூ.9,009 வரைக்கும், உருண்டை ரகம் குவிண்டாலுக்கு ரூ.3,919 முதல் ரூ.8,389 வரைக்கும், பனங்காலி ரகம் குவிண்டாலுக்கு ரூ.12,819 முதல் ரூ.13,369 வரைக்கும் ஏலம் போனது. மொத்தம் 500 மூட்டைகள் வரத்து இருந்தது. இதில் ரூ.10 லட்சத்திற்கு மஞ்சள் ஏலம் போனது. கடந்த வாரத்தை விட குவிண்டாலுக்கு ரூ.200 முதல் ரூ.300 வரை விலை அதிகரிப்பால் மஞ்சள் சாகுபடி செய்த விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## <u>நீர்மட்டம் 40 அடியாக உயர்வு: வைகை அணையில் இருந்து பாசனத்திற்கு மீண்டும் தண்ணீர் திறப்பு</u>



ஆண்டிப்பட்டி, வைகை அணையின் நீர்மட்டம் 40 அடியாக உயர்ந்ததை தொடர்ந்து, அணையில் இருந்து பாசனத்திற்காக மீண்டும் தண்ணீர் திறக்கப்பட்டது.

<u>நீர்மட்டம் குறைந்தது</u>

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி அருகே உள்ள வைகை அணையில் இருந்து கடந்த சில மாதங்களாக தொடர்ந்து பாசனத்திற்காகவும், குடிநீர் தேவைக்காகவும் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. தொடர்ந்து தண்ணீர் திறக்கப்பட்டதால் வைகை அணை இந்த ஆண்டு முழுக்கொள்ளளவை எட்டவில்லை. இதைத் தொடர்ந்து வைகை அணையின் நீர்மட்டத்தை உயர்த்துவதற்கு முல்லைப்பெரியாறு அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. ஆனால் அணையில் இருந்து பாசனத்திற்கு திறக்கப்படும் தண்ணீரின் அளவு அதிகமாக இருந்து வருவதால், அணை நீர்மட்டம் தொடர்ந்து சரிந்து கொண்டே வந்தது. கடந்த 23–ந்தேதி அணையின் நீர்மட்டம் 30 அடியாக குறைந்தது. இதையடுத்து வைகை அணையில் இருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறப்பது நிறுத்தப்பட்டது.

மீண்டும் தண்ணீர் திறப்பு

மதுரை மாநகர குடிநீர் தேவைக்கு மட்டும் வினாடிக்கு 60 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வந்தது. தண்ணீர் திறப்பு நிறுத்தப்பட்ட நிலையில் அணையின் நீர்மட்டம் நேற்று 40 அடியாக உயர்ந்தது. இந்நிலையில் மதுரை, திண்டுக்கல் மாவட்ட விவசாய தேவைக்காக அணையில் இருந்த மீண்டும் தண்ணீர் திறக்க அரசு உத்தரவிட்டது. இதைத்தொடர்ந்து நேற்று காலை 6 மணி முதல் வைகை அணையில் இருந்து மீண்டும் பாசனத்திற்காக கால்வாய் வழியாக தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. அணையில் இருந்து திறக்கப்படும் தண்ணீரின் மூலம் வைகை நுண்புனல் மின்சார நிலையத்தில் மீண்டும் மின்சார உற்பத்தி தொடங்கி உள்ளது. நேற்று காலை 6 மணி நிலவரப்படி, நீர்மட்டம் 40.42 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 1,379 கனஅடி தண்ணீர் வந்து கொண்டு இருந்தது. அணையில் இருந்து பாசனத்திற்காகவும், குடிநீர் தேவைக்காகவும் வினாடிக்கு 1,860 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது. அணையின் மொத்த நீர் இருப்பு 982 மில்லியன் கன அடியாக இருந்தது.

## ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கரும்பு அரவை தொடக்கம் 1 லட்சம் மெட்ரிக் டன் கரும்புகளை அரவை செய்ய இலக்கு



ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கரும்பு அரவை தொடங்கி உள்ளது. இந்த பருவத்தில் 1 லட்சம் மெட்ரிக் டன் கரும்புகளை அரவை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக ஆலையின் தலைவர் தெரிவித்தார்.

கூட்டுறவுசர்க்கரைஆலை

ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் 2014–2015 ஆம் ஆண்டு அரவை பருவத்திற்கான கரும்பு அரவை தொடக்க விழா நேற்று நடந்தது.

விழாவை முன்னிட்டு காலையில் சிறப்பு பூஜை நடந்தது. நிகழ்ச்சிக்கு கூட்டுறவு சர்க்கரை ஆலை தலைவர் எம்.மதியழகன் தலைமை தாங்கினார். நிர்வாக இயக்குநர் கா.ஜெயம் முன்னிலை வகித்தார். கரும்பு அபிவிருந்தி அலுவலர் விவேகானந்தன் வரவேற்று பேசினார். அரவையை அணைக்கட்டு உறுப்பினர் கலையரசு எம்.எல்.ஏ. கலந்து கொண்டு கரும்பு அரவையை துவக்கி வைத்தார். இதனையொட்டி நடந்த நிகழ்ச்சியில் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் தலைவர் எம்.மதியழகன் கூறியதாவது:–

2014–2015 அரைவை பருவத்திற்கு 1.05 லட்சம் மெட்ரிக் டன் கரும்பு அரவை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒரு நாளைக்கு 1, 400 மெட்ரிக் டன் கரும்பு அரவை செய்யலாம். சர்க்கரை கட்டுமானத்தின் அளவு 9.5 ஆகும். 65 நாட்களுக்கு கரும்பு அரவை பணி நடைபெறும் என உத்தேசிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு 93 ஆயிரம் மெட்ரிக் டன் கரும்பு அரவை செய்யப்பட்டது. ஆலைக்கு கரும்பு வழங்க 3 ஆயிரம் விவசாயிகள் பதிவு செய்துள்ளனர். 15 நாட்களுக்குள் கரும்பு விவசாயிகளுக்கு உண்டான தொகை கரும்பு வழங்கிய 15 நாட்களுக்குள் வழங்கப்படும். கரும்புக்கான விலை ரூ.2, 200 என மத்திய அரசு நிர்ணயித்துள்ளது. மாநில அரசின் தொகை எவ்வளவு என அறிவித்த பிறகு அதனையும் சேர்த்து விவசாயிகளுக்கு வழங்கப்படும். இவ்வாறு அவர் கூறினார். நிகழ்ச்சியில் கீழ் முருங்கை ஊராட்சி தலைவர் ரவி, முன்னாள் தலைவர் எஸ்.ரவி, கூட்டுறவு சர்க்கரை ஆலை இயக்குநர்கள் செல்வம், புஷ்பநாதன், கார்த்திகேயன், பாலாஜி, சின்னதுரை உள்ளிட்ட கலந்து கொண்டனர்.